**சுருக்கம்**

சிலை அமைத்தல் – திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகரம் புதிய பேருந்து நிலையம் அருகில் தந்தை பெரியாரின் வெண்கலத்தினாலான முழு உருவச் சிலை நிறுவ அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை(நிலை) எண்.59 நாள் 29.3.2010

படிக்க:

1. திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித ந.க.எண். 19055/ 2007/ இ4, நாள் 22.1.2010.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 5221/ 2010/எம்.1, நாள் 24.2.2010.

-----

**ஆணை:**

திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், திருவாரூர் மாவட்டம், திராவிடக்கழக நகரத் தலைவர் திரு. குணசேகரன், திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையத்தில் பெரியார் சிலை அமைத்திட அனுமதி கோரி விண்ணப்பம் செய்துள்ளதாகவும், அதன்பேரில் மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் திருவாரூர் காவல் கண்காணிப்பாளர், கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத் துறை ஆகியோரிடம் அறிக்கை கோரப்பட்டதாகவும், நெடுஞ்சாலைத் துறை கோட்டப்பொறியாளர் தமது அறிக்கையில், திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் தந்தை பெரியார் சிலை அமைக்கப்படவுள்ள இடம், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமானது என்றும், இந்த சிலை அமைப்பதினால் போக்குவரத்திற்கு, இடையூறு ஏதுமில்லை என்றும், எனவே அவ்விடத்தில் சிலை அமைக்க ஆட்சேபனை இல்லை என தெரிவித்துள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

2. மேலும் மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலர், தமது அறிக்கையில், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகரம் புல எண். 133/1பி2–ல் திட்ட விஸ்தீர்ணம் 3.17.50 ஹெக்டேரில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தந்தை பெரியார் சிலை அமைப்பது தொடர்பாக, புல ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி இடம் கிராம 'அ ' பதிவேட்டில் வடுகநாதன் செட்டியார் பெயரில் உள்ளதாகவும், அதன் ஒரு பகுதி நகராட்சி நிர்வாகத்தால் பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு கிரயம் பெறப்பட்டுள்ளது என்றும், அந்த இடத்தில் சிலை அமைக்க நகராட்சி நிர்வாகத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அந்த இடம் போக்குவரத்திற்கும், சட்டம் ஒழுங்கு பிரச்சினைக்கும் இடையூறு இல்லை என

தெரிவித்துள்ளதாகவும், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தமது அறிக்கையில், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தந்தை பெரியார் சிலை அமைப்பதால், சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்பில்லை என தெரிவித்துள்ளதால், மேற்படி சிலை அமைக்க அனுமதி அளிக்கலாம் என திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், திரு.குணசேகரன், திராவிடக் கழக தலைவர், திருத்துறைப்பூண்டி அவர்கள், திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையத்தில் தந்தை பெரியார் சிலை அமைத்திட அனுமதி கோரி விண்ணப்பம் செய்துள்ளதன் பேரில் மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் திருவாரூர் காவல் கண்காணிப்பாளர், கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை ஆகியோர் பெரியார் சிலை அமைப்பதற்கு ஆட்சேபனை ஏதுமில்லை என தெரிவித்துள்ளதாலும், திருத்துறைப்பூண்டி நகராட்சியின் நகர்மன்ற தீர்மானம் எண்.48, நாள் 31.03.2008–ல் நகராட்சி பேருந்து நிலையத்தில் நகர புல எண்.133/1/பி2–ல் தந்தை பெரியார் சிலை அமைக்க தடையின்மை சான்று வழங்கிட தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாலும் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகரம் புதிய பேருந்து நிலையத்தின் அருகில் தந்தை பெரியார் சிலை அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குர் ஆகியோரின் பரிந்துரையினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.1998–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, சிலை நிறுவவும் சிலை வெண்கலத்தால் நிறுவ வேண்டும் என அறிவுறுத்தியும், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகரம் புதிய பேருந்து நிலையம் அருகில் தந்தை பெரியாரின் வெண்கலத்தினாலான சிலை அமைக்க அனுமதி கோரும் திருவாரூர் மாவட்ட ஆட்சி தலைவரின் செயற்குறிப்பினை ஏற்கலாம் என கருதி அவ்வாறே அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம், திருவாரூர்
நகராட்சி ஆணையர், திருத்துறைப்பூண்டி நகராட்சி, திருவாரூர் மாவட்டம்.
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–600 009.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.